# சுதந்திரன்
SUTANTIRAN

வள்ளுவர் ஆண்டு 2009
சித்திரை 27
ஜமா. ஆகி. 2
புதன் (10-5-1978)
நிருவியது 1947
புத்தகம் 31
இதழ் 96
யாழ். தொ.பே.இல. 352
விலை சதம் 35




# 'தமிழ் புலி இயக்கம்' தோன்றிய அரசியல் காரணிகள் யாவை?

## 'டிறிபியூன்' ஏட்டின் கருத்து!

1972ம் ஆண்டின் புதிய குடியரசு அரசியல் சட்டம், தமிழ்மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்க மறுத்தல், தமிழ் பிரதேசத்தில் நிரந்தர ஆயுதப்படைக்குவிப்பு, தமிழ் இளைஞர்கள் மிலேச்சத்தனமாக பொலிசாரால் கொடுமைக்குள்ளாக்கப்பட்டமை, போன்ற பல்வேறு முக்கிய காரணிகளால் தான் தமிழ் இளைஞர்கள் மத்தியில் 'புலி இயக்கம்' போன்ற பயங்கரவாத இயக்கம் தலையெடுத்துள்ளது!

இவ்வாறு 'டிறிபியூன்' ஆங்கில வார ஏடு அதன் 29-4-78 இதழில் எழுதியுள்ளது.

அதன் சுருக்கம் வருமாறு:

"1971ம் ஆண்டு இடம் பெற்ற பயங்கரவாதம் சிங்களவர் பெரும்பான்மையாக வாழும் பிரதேசங்களில் கோபமும், விரக்தியும், தவருன அரசியல் வழிகாட்டுதலும் கொண்ட சிங்கள இளைஞர்களின் வெளிப்பாடாகும்.

நிரந்தர நாசகாரசக்திகள் என்று அரசாங்கத்தால் கருதப்பட்ட சுமார் 40 தமிழ் இளைஞர்களை விசாரணையின்றி அப்போதைய அரசாங்கம் தடுப்புக்காவலில் வைத்திருந்தபோதிலும், சிங்கள நாட்டில் இடம் பெற்ற பயங்கரவாத நிகழ்ச்சிகளில் தமிழ் பிரதேசங்கள் அறவே பங்குபற்ற வில்லை; 1971 பயங்கரவாதத்தில் ஈடுபட்ட சிங்கள இளைஞர்கள் பரோலில் விடுதலை செய்யப்பட்ட பின்னரும்கூட (இவர்களில் பலர் அரசாங்க உத்தியோகங்களில் சேர்த்துக் கொள்ளப்பட்ட பின்னர்கூட) தமிழ் இளைஞர்கள் சிறைக்குள் வைக்கப்பட்டிருந்தனர்.

இதே வேளையில், 1972ம் ஆண்டு தவருன முறையில் பிறந்த புதிய குடியரசு அரசியலமைப்பின் காரணமாக, விரக்தியடைந்த தமிழ் இளைஞர்கள் தனித்தமிழ் ஈழ அரசு அமைக்கும் கொள்கைக்கு தள்ளப்பட்டனர். தமிழ் பிரதேசங்களில் ஆயுதப்படைகள் நிரந்தரமாக குவித்து வைக்கப்பட்டமையும், பொலிசார் மேற்கொண்ட மிலேச்சத்தனமும் காட்டுமிராண்டித்தனமும் நிறைந்த மோசமான நடத்தையுமே தமிழ் பிரதேசத்தில் ஒரு தலைமறைவு இயக்கத்துக்கு கால்கோளிட்டன; அத்துடன் தமிழர்களில் சில பிரிவினர் மத்தியில் பயங்கரவாத இயக்கத்தை ஆதரிக்கும் நிலைமையையும் இதுவே தோற்றுவித்தது.

ஒற்றையாட்சி அமைப்பின் கீழ் சுயாட்சி அமைப்புக்களை ஏற்படுத்துவதன் மூலமாவது தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கமறுத்தும் விரக்தியை அதிகரிக்கச் செய்து பயங்கரவாதத்தை நோக்கி தமிழ் இளைஞர்களைத் தள்ளியது.

ஜாதிக விமுக்தி பெரமுனையின் சட்டபூர்வமானதும், அரசியலமைப்புக்கு அமைந்ததுமான நடவடிக்கைகளை கூட பொலிசார் மிலேச்சத்

—4-ம் பக்கம் பார்க்க

### ஆச்சரியம் ஆனுல் உண்மை!

ஆகஸ்ட் கலவரத்தில் பலமாகத் தமிழர்கள் தாக்கப்பட்ட இடமான அனுராதபுரத்தில்-சென்ற கிழமை இடி விழுந்து பன்னிரண்டு பேர் மாண்டுபோனுர்கள் — அவர்கள் அனைவரும் — தமிழரல்லாதவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.


- 'நர்ஸ்ஒருவெள்ளைப்புரு'
- 'சிறைச்சாலை இனிக்கும்'
- தீவிரம்+நிதானம் =அமிர்தலிங்கம்
- "டோன்ற் மிஸ் த பஸ்'
- தித்திக்கும் சிறு கதைகள், கட்டுரைகள் நகைச் சுவை அம்சங்களுடன்,

சுடர்
CHUDAR

இந்த வாரம் எங்கும் கிடைக்கும்


## ஏழை மக்கள் வயிற்றிலடி! 'தர்மீக' அரசின் நள்ளிரவு நாடகம்!

நள்ளிரவு 12 மணிக்கு விசேட வர்த்தமானிமூலம் விலைவாசிகளைக் கூட்டி மக்களின் வயிற்றிலடித்த இறுதியில் தனக்குத்தானே புதைகுழி தோண்டிக் கொண்டது முந்திய சிறீலங்கா—சமசமாஜ—கம்யூனிஸ்ட்களின் முக்கூட்டரசு!

அதே பாதையில் இன்று நடைபோட்டு ஏழை மக்களின் வயிற்றிலடிக்கத் தொடங்கியுள்ளது. தார்மீகம் பேசும் ஜே.ஆர்.அரசு; ஏற்கெனவே விலைவாசி உயர்வினுல் "ததிங்கணதோம்'' போடும் ஏழை மக்களுக்கு மா, பாண் போன்றவற்றின் விலையை உயர்த்தியதன் மூலம் மேலும் கொடுமை இழைக்கப்பட்டுள்ளது.

6-5-78 நள்ளிரவுமுதல் மாவின் விலை இருத்தலுக்கு 12 சதத்தாலும் பாணின் விலை இருத்தலுக்கு பத்து சதத்தாலும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

# மீண்டும் ஒரு இனசங்காரத்துக்கு பொலீஸ், இராணுவம் வழிகோலுகிறதா?

## வவுனியாவில் தமிழர் உணவு விடுதி தாக்கப்பட்டது!

1978 ஆகஸ்ட் திங்களில் இடம் பெறற தமிழ் இனக்கொலை போல, மீண்டும் ஒரு தமிழ் இனசங்காரத்துக்கு சிங்கள இனவெறிபிடித்த பொலிசாரும், இராணுவத்தினரும் திரைமறைவில் திட்டமிட்டு வருகின்றனரா என்ற கேள்வி தமிழ்மக்களின் நெஞ்சங்களில் பதட்டத்துடன் எழுந்துள்ளது.

சென்றவாரம், வவுனியாவில் தமிழருக்கு சொந்தமான உணவுவிடுதியொன்று சேதத்துக்குள்ளாக்கப்பட்டு, அதன் காசாளர் மோசமாகத் தாக்குதலுக்குள்ளாகி, வவுனியா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இத்தாக்குதலை நடத்தியவர்கள் சாதாரண உடையில் வந்த இராணுவத்தினரே என்று கூறப்படுகிறது.

இச்சம்பவத்தின் பின்னர், அமைதியை நிலைநாட்ட வந்த பொலிசாரும் தமிழ் பொதுமக்களை தா[illegible]வும் இதனுல் இருபிரிவினருக்குமிடையே பலத்த கைகலப்பு ஏற்பட்டதாகவும் சொல்லப்படுகிறது.

தாக்குதலுக்குள்ளான உணவுவிடுதி, 1978 கலவரத்தின்போதும் சேதமாக்கப்பட்டதென்பது குறிப்பிடத்தக்கது.

பொதுமக்களைத் தாக்கிய பொலிசார் அவர்களில் [illegible] முத்து, யூ. வீரமலை, எஸ். சற்குணம், எஸ். நடராசா, பி. பாலசுப்பிரமணியம், பி. கறுப்பையா, எஸ். சுப்பிரமணியம், ஆகிய ஆறுபேரை கைதுசெய்துள்ளார்கள்.

தாக்கப்பட்ட காசாளர், தம்மைத்தாக்கிய இராணுவத்தினர் நால்வரையும் அடையாளம் காட்டமுடியும் என்று பொலிசாரிடம் புகார்செய்துள்ளார்.



### ஆபீஸ் பையன் கேட்கிறுன்!

"ஏன் சேர், உண்மையாகத்தான் கேக்கிறன், இலவச அரிசிக்குப்பதிலாக நெல்லைக் கொடுக்கப்போவதாக அரசாங்கம் இப்போது கூறியிருக்கிறதே, இன்னும் கொஞ்சநாளில் நெல்லுக்குப்பதிலாக உமியையும் கொடுக்கும் போல..."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் ஈழத்தேசிய இனத்தின் விடுதலைக் குரல்

# ‘தமிழ்மக்கள் இட்ட ஆணையை நிறைவேற்றிடத் தயங்கிடோம்!’

## மேநாள் கூட்டத்தில் தலைவர் அமிர் சபதம்!

“1977 ஆடிப் பொதுத்தேர்தலில் தமிழ் மக்கள் எமக்கு இட்ட ஆணையை நிறைவேற்ற ஒவ்வொரு முயற்சியையும் நாம் மேற்கொண்டே தீருவோம். ஒரு சுதந்திர சோசலிச மதசார்பற்ற தமிழ்நாட்டை உருவாக்கி அங்கு சுரண்டலற்ற புதிய தமிழ் சமுதாயமொன்றை கட்டியெழுப்புவதே எமது இலட்சியம். இந்த இலட்சியத்தை வென்றெடுப்பதற்கு நாம் நடத்துகின்ற போராட்டத்துடன் இணைய தமிழ் இடதுசாரிகளும் முன்வந்திருப்பது வரவேற்கத்தக்கது.”

—இவ்வாறு யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணி — செந்தமிழர் இயக்கம் — தமிழ் மொழிவழித் தொழிற்சங்கங்கள் — இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்—ஆகியவற்றின் கூட்டு மேதின விழாவிற்கு தலைமைதாங்கி உரையாற்றிய தமிழர் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் குறிப்பிட்டார்.

அடலேறு மு. ஆலாலசுந்தரம் தமது வரவேற்புரையின்போது— தமிழ்ஈழ நாட்டின் சுதந்திரத்தை வென்றெடுப்பதற்கு தமிழ்தொழிலாளர்கள் அனைவரும் ஒரே யணியிற் திரளவேண்டும் என்றார்.

திரு. அமிர்தலிங்கம் தொடர்ந்து தமது பேச்சில் கூறியதாவது:-

“தமது தாயகத்தின் விடுதலைக்குப் போராடிவரும் தமிழ் தொழிலாள வர்க்கம், இன்று ஒன்றுபட்டு இந்த மேதின விழாவை எடுக்கிறது. தமிழினம் இந்த நாட்டில் ஆளப்படும் நிலையிலிருந்து மாறி, ஆளும் நிலைக்கு உயரவேண்டும்; தமிழ்ஈழம் சுரண்டலற்ற, சாதிகள் அற்ற ஒரு சோசலிச சமுதாயமாக, உலகத்துக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்கும் ஒப்பில்லாத சமுதாயமாக விளங்க வேண்டும் என்ற நோக்கத்துடனேயே நமது போராட்டம் அமைந்துள்ளது.

‘‘அயரிஷ்’’ விடுதலைப் போராட்டத்தின்போது கார்ல்மாக்ஸ்கூறியதுபோல-நமது தமிழ்ஈழ நாட்டுக்கு முதலில் வேண்டியது சுதந்திரமான தனியாட்சி, அடுத்த தேவை சோசலிச நிர்மானம். இந்த இலக்குடனேயே எமது பயணத்தை நடத்துகிறேம்.

தமிழினம் குட்டுப்பட்டு குட்டுப்பட்டு இந்நாட்டில் வாழ்ந்துகொண்டிருக்க முடியாது. நம்மை நாமே ஆள வேண்டும் என்று முடிவு செய்துவிட்டோம். சென்ற ஆவணிக்கலவரத்தின்போது தமிழர்கள் அடைந்த பயங்கரக் கொடுமைகள், தமிழர்களுக்கு ஒரு நாடு வேண்டுமென்பதை உறுதிப்படுத்தி விட்டது. ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் மகுடியில் மயங்குவதற்கு நாம் அரசியலில் அரிவரி மாணவர்கள் அல்ல; எந்தச் சமயத்தில் என்ன நடவடிக்கையை எடுக்கவேண்டுமென்பது எங்களுக்கு தெரியும். உரிய நேரத்தில்தனிநாடுபோராட்டத்தை பிரகடனப்படுத்துவோம்!’’

திரு. வி. பொன்னம்பலம் பேசுகையில் — செந்தமிழர் இயக்கம் கூட்டணியின் போட்டியியக்கம் அல்லவென்றும், கம்யூனிஸ்ட் அகிலத்தின் ஆதரவை தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு பெற்றுக்கொடுப்பதே தமது இலட்சியமென்றும், திரு. அமிர்தலிங்கம் தமிழினத் தலைவராக விளங்குவது தமிழினம் செய்த பெரும் பேறு என்றும் குறிப்பிட்டார்.

திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் பேசுகையில்-பிரதேச சுயாட்சி, மாவட்ட சபை, சமஷ்டி போன்ற அனைத்தையும் நாம் நிராகரித்துவிட்டோம் — இன்று நாம் கோருவது தனிநாடு ஒன்றே; இதிலே பேரம்பேசுவதற்கு இடமில்லையென்றார்.

மாவை சேனாதிராசா பேசுகையில் சுதந்திர சோசலிச தமிழ்ஈழக் குடியரசை இந்தத் தலைமுறையிலேயே பெற்றுவிடுவோம் என்றார்.

பருத்தித்துறை பா. உ. திரு. க. துரைரத்தினம் பேசுகையில் — சுதந்திரத் தமிழ் ஈழத்தில் முதலாளிகளின் முதுகெலும்பு முறிக்கப்படும் என்றார்.

மேநாள் தீர்மானங்களை அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தின் முன்னாள் தலைவர் திரு. நமசிவாயம் முன்மொழிந்து பேசினார்.

மற்றும் திருவாளர்கள்:- க. சோதிலிங்கம் (அரசாங்க எழுதுவினைஞர் சங்கம்)

சி. இரத்தினசிங்கம் (ஈழத் துறைமுக தமிழ் ஊழியர் சங்கம்)

க. செல்லையா (இலங்கை பஸ் தொழிலாளர் கழகம்)

ம. வேலுப்பிள்ளை (உள்ளூராட்சிஎழுதுவினைஞர்சங்கம)

எஸ். தங்கசாமி (விவசாய தொழிலாளர் காங்கிரஸ்)

ந. பாலசுப்பிரமணியம் (தமிழர் ஆசிரியர் சங்கம்)

ஐ. தி. சம்பந்தன் (தமிழ் தொழிற்சங்கக் கூட்டணி)

ஈழவேந்தன்(மத்திய வங்கி ஊழியர் சங்கம்)

மற்றும் அரசாங்கக் கூட்டுத்தாபன ஊழியர் பிரதிநிதி ஆகியோருடன் யாழ் பா.உ. திரு. வெ. யோகேஸ்வரன், செந்தமிழர் இயக்கத்தைச்சேர்ந்த சிவா. சுப்பிரமணியம் ஆகியோரும் பேசினர். யாழ் அ.எ.வி.சங்க செயலாளர் ஸ்ரீபதி தொழிலாளர் கீதங்களைப்பாடினார். இயக்கப்பாடல்கள் பாடப்பட்டதுடன்,மல்லன்—மடையன் நாட்டுக்கூத்தும் இறுதியாக இடம்பெற்றது.

## பட்டிருப்பு தொகுதி த. வி. கூ. கிளை

கடந்த 19-4-78 புதன் கிழமை காலை 10 மணியளவில் திரு. பூ. கணேசலிங்கம் தேசிய பேரவை உறுப்பினர் அவர்கள் தலைமையில் பட்டிருப்பு தமிழர் விடுதலைக் கூட்டணி தொகுதிக் கிளை அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

அவ்வேளையில் பின்வருவோர் நிர்வாகஸ்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர் தேசியப் பேரவை உறுப்பினர், திரு. பூ. கணேசலிங்கம் அவர்கள், உபதலைவராக திரு. நா. முத்துப்பிள்ளை அவர்களையும், திரு. த. கணேசபிள்ளை அவர்களைச் செயலாளராகவும், திரு.கோ பாக்கியராசா உபசெயலாளராகவும், முறையே திரு. சீ. கணபதிப்பிள்ளை திரு. அ. சாந்தகுமார், திரு. செ. தெய்வநாயகம், திரு. சொ. சாந்தலிங்கம், திரு. சீ. மூத்ததம்பி, திரு. ப.அப்பாக்குட்டி திரு. எஸ். தம்பியப்பா, திரு. செ.வசந்தராசாபிள்ளை திரு. க. வடிவேல், திரு. த. இராசதுரை, திரு. க. பரமலிங்கம் ஆகியோர் ஏகமனதாய் தெரிவு செய்யப்பட்டனர்.

## நாம் தமிழர் என்ற உணர்வுடன் ஒன்றுபட்டுப் போராடுவோம்

### களுதாவளையில் கணேசு முழக்கம்!

“தமிழ் பேசும் மக்கள் ஒன்றுபட்டு தமிழ் தேசியஇனம் என்ற நிலையில் தமது சுய நிர்ணய உரிமையின் அடிப்படையில் ஒரு சுதந்திரத் தமிழ் நாட்டை அமைக்கப் போராடி வருகின்ற இவ் வேளையில் பிரதேசபிரிவினை வாதத்தை கிளப்பி, வடக்கு, கிழக்கு, என்று தமிழ் மக்களை கூறுபோட நினைப்பவர்கள் யாராயிருந்தாலும் அவர்கள் தமிழ் சமுதாயத்தின் துரோகிகளே!’’

இவ்வாறு களுதாவளையில் தமிழர் விடுதலைக் கூட்டணி ஆதரவாளர்களால் தமக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு உபசாரக் கூட்டத்தில் பேசுகையில் கிழக்கிலங்கையின் எழு ஞாயிறு பட்டிருப்பு பா.உ. திரு பூ. கணேசலிங்கம் முழக்கமிட்டார். திரு கணேசலிங்கம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது;

“எனது அண்மைக்கால அரசியல் வாழ்க்கையில் அமைச்சர்களுடனும் ஜனாதிபதியுடனும் பேச்சு வார்த்தைகளில் கலந்து கொண்டதன் பலனாக, வடமாகாணத்து மக்கள் யாழ்ப்பாணத்துக்கு மட்டும் சுய ஆட்சி [illegible] மெனக் கோரியிருந்தால், அது அவர்களுக்கு சுலபத்தில் கை கூடியிருக்குமென்பதை என்னால் அறிய முடிந்தது. ஆனால் யாழ்ப்பாண தமிழ் மக்கள் சுய நலமின்றி எல்லோரும் தமிழர் என்ற முறையில் எவ்வித பாகுபாடுமின்றி வடக்கு, கிழக்கு மாகாணங்கள் ஒன்றிணைந்த சுயாட்சி கோருவதாலேயே அதை வழங்க அரசு பின் வாங்குகின்றது. இதை நாம் உணர வேண்டும்.

வடக்கு, கிழக்கு எனப் பிரதேச வேறுபாடு காட்டாது நாம் தமிழர் என்ற உணர்வுடன் மொழியாலும் இனத்தாலும் ஒன்று பட்டு நமது இனத்தின் இறைமையை மீட்கப் பாடுபட வேண்டும். இல்லையேல் நமது தாயகத்தை மீட்க முடியாது.

நாம் எமக்கென தனியாட்சி கோரிப் போராடும் அதே நேரத்தில், எமது பகுதிகளை பல்துறையிலும் முன்னேற்ற உழைக்க வேண்டும். எனவேதான் எனது விடா முயற்சியால் இவ்வாண்டு பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் புதிய வேலைகளுக்கு பணம் ஒதுக்குவதில்லை என இருந்த போதிலும், நான் வாதாடி, பட்டிருப்பு தொகுதிக்கு மட்டும் புதிய வேலைகளுக்கென ஐந்து லட்சம் ரூபாவை ஒதுக்குவித்துள்ளேன்.’’



இக் கூட்டத்துக்கு திரு. சி. சிவசுப்பிரமணியம் தலைமை வகித்தார்.

## தமிழர் கூட்டணி கோண்டாவில் கிழக்கு கிளை

மேற்படி கிளை அண்மையில் திரு. மு. சிவசிதம்பரம் அவர்களின் தலைமையில் புனரமைக்கப்பட்டது. பின்வருவோர் உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்: திரு இ. குணநாயகம். செயலாளர்:திரு வ. சந்திரசேகரம், உபதலைவர்கள் [illegible] சி. பரமலிங்கம், செயலாளர் திரு வ. சந்திரசேகரம்; உபசெயலாளர்: திரு தம்பி ஆனந்தன். பொருளாளர் திரு ந. நாகேஸ்வரன். நிர்வாக சபையினர் திரு வெ.சி. பத்மநாதன். திரு செ. பஞ்சலிங்கம். திரு த. மகாதேவன்; திரு அ. கந்தசாமி திரு க. சண்முகநாதன். திரு ச. சுப்பிரமணியம். திரு தி. லோகேந்திரன்.


### நீம் வாசனை சோப்

சுத்தமான வேப்பெண்ணெய் கலந்து தயாரிக்கப்பட்ட நீம் வாசனை சோப் வாங்கி உபயோகியுங்கள், சருமத்தின் பாதுகாப்பிற்குச் சிறந்தது; மேலுறைகளைச் சேகரித்தனுப்பி பரிசில்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்,

மில்க்வைற் யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# 'ஜே ஆரின் தார்மீக அரசு சிங்களவர்களுக்குத்தான்

# எம்.ஜி. ஆரிடம் தமிழர் ஓடட்டும்!'

## இவ்வாறு கூறியபடி பொலிசார் தாக்கினார்களாம்

## நல்லூர் சிவாவிடம் தமிழ் இளைஞர் ஒருவரின முறையீடு!

24 மணித்தியாலங்களுக்குள் பொலிசாரால் விசாரணைக்கென அழைத்துச் செல்லப்படும் எவரும் விடுதலை செய்யப்படவேண்டும், அல்லது நீதிமன்றத்தில் நிறுத்தப்படவேண்டுமென்பது நாட்டின் சட்டம். ஆனால் அச் சட்டத்தை மீறி பொலிசார் நாள் கணக்காக தமிழ் இளைஞர்களை தடுத்து வைத்து அடித்து உதைத்து துன்புறுத்தி வருகின்றனர். இது சர்வசாதாரணமாக இப்போது நடைபெற்று வருகிறது. இதோ, ஆறு நாட்களாக தொடர்ந்து சி.ஐ.டி. பொலிசாரால் துன்புறுத்தப்பட்டபின் விடுதலை செய்யப்பட்ட தமிழ் இளைஞர் திரு. சுரேஷ் செல்வக்குமார் தனக்கு நடந்த கொடுமைகளை விளக்கி நல்லூர் பா. உ. தி. மு. சிவசிதம்பரத்துக்கு எழுதியுள்ள கடிதத்தின் சில பகுதிகளை வெளியிட்டுள்ளோம். பொலிசாரின் அக்கிரமத்துக்கு இது சிறு 'சாம்பிள்'

திரு. சுரேஷ் குமாரின் கடிதம் வருமாறு:-

ஏப்ரல் 20ம் திகதி மாலை 7 மணியளவில் மட்டுநகரில் வைத்து கைதுசெய்யப்பட்ட நான், உடனடியாக வீடு சோதனை செய்யப்பட்டபின், எவ்வித அறிவித்தலுமின்றி பொலிசாரால் அழைத்துச் செல்லப்பட்டேன். என்னைக் கொண்டுசென்ற ஜீப் வெருகல் சந்தியைக்கழிந்தவுடன், "இனி உங்கள் பகுதி முடிந்தது; எங்கள் நாடு இது; இந்தா வாங்கு" எனக்கூறி அடிக்கத் தொடங்கினார்கள். S.M.G. பிடியாலும், கைகால்களாலும், வழிநெடுக அடித்துக் கொண்டேயிருந்தனர். வழிநெடுகலும், அமுதண்ணையையும் மங்கை அக்காவையும் அவதூறு கத்தித் திட்டிக் கொண்டே வந்தனர்.

அன்று இரவு 2 மணியளவில் அனுராதபுரம் பொலிஸ் நிலையத்தில் கையும் காலும் கட்டப்பட்ட நிலையில் விட்டு சித்திரவதை செய்யப்பட்ட நான், மீண்டும் மறுநாள் (21.4 78) காலை, மன்னார் நோக்கிக்கொண்டு செல்லப்பட்டேன். ஜீப்பில் ஏறிய நேரம் தொடக்கம் வழி நெடுகிலும் அடி. சித்திரவதை. முருங்கன் றோட்டில் இரு தடவைகள் ஜீப்பிலிருந்து இறக்கப்பட்டு, நான் பகல்11மணியளவில் கொதிக்கும் வெய்யிலில் கையும் காலும் விலங்கிடப்பட்டு இரகசிய பொலிசாரால் மிருகத்தனமாகத் தாக்கப்பட்டேன், என் மேல் ஏறி உழக்கினார்கள். தெருவில் "புட்போல்" விளையாடினார்கள் பின்னர் மன்னாரில் மடுமாத கோவிலுக்கு முன்னுள்ள சி. ஐ. டி. காரியாலயத்துக்கு கொண்டுசென்று அங்குள்ள ஓர் அறைக்கு இழுத்துச் சென்று என்னை நிர்வாணமாக்கி குண்டாந்தடியாலும், பெல்டாலும் அடித்தார்கள்; அங்குள்ள கூரையில் என்னைத் தலைகீழாகத் தொங்கவிட்டு அடித்தார்கள். 15 முதல் 30 நிமிடம் வரை இக்கொடுமை தொடர்ந்தது. நெருப்பினால் சுடப்பட்டேன். ஆண் உடம்பில் உதைத்தார்கள். காட்டுமிராண்டித்தனமாகத் தாக்கப்பட்டேன்.

24 மணிநேரத்துக்குமேல் ஒருவரை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யாது பொலிசார் தடுத்து வைத்திருக்க முடியாதென்பது சட்டம், ஆயினும் 20-4-78 மாலை 7மணிக்கு கைது செய்யப்பட்ட நான், 26-4-78 நண்பகல் ஒருமணிவரை தடுத்து வைக்கப்பட்டிருந்தேன், மன்னாரிலிருந்து மீண்டும் 23-4-78ல் மட்டுநகர் கொண்டுசென்று பின்னர் உடனடியாககொழும்புக்கு அழைத்துச் சென்று 26-4-78ல் நீதிமன்றத்துக்கு பாரப்படுத்தாமலே விடுதலை செய்தனர்.

"என்னை அடித்து உதைத்த நேரத்தில், சன்சோனியும் அவரது கமிஷனும் தங்களை ஏதும் செய்ய முடியாதென்றும், ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் தார்மீக அரசாங்கம் சிங்களவர்களுக்குத்தான் என்றும் தாம் மீண்டும் ஆயத்தப்படுத்திக் கொண்டு வருவதாகவும் விரைவில் தமிழர்களுக்கு ஓட ஓட உதை கிடைக்குமென்றும் இந்தியாவை நோக்கி எம்.ஜி.ஆரிடம் தமிழர்கள் ஓட வேண்டியது தானென்றும் இன்னும் எதிர்க்கட்சித்தலைவர் திரு. அமிர்தலிங்கம் அவர்களைப் பற்றி வம்பு தும்பாக ஏசியபடியும் தாக்கினர்.

இவ்வாறு திரு. செல்வகுமார் தமது கடிதத்தில் எழுதியுள்ளார்.

---

## கூட்டணியின் மேதின விழா வானொலியில் இருட்டடிப்பு!

30.4.78, 1.5.78 ஆகிய திகதிகளில் இலங்கைவானொலியில் ஒலிபரப்பப் பட்ட செய்திகளில் மே தினத்தை கொண்டாடும் அரசாங்க கட்சியான யூ.என்.பி யினதும், மற்றையஎதிர்க் கட்சிகளான சி.ல.சு.க, ல.ச.ச.க. கம்யூனிஸ்ட், ஜனதாவிமுக்தி பெரமுனை, இ.தொ.க, புரட்சிவாத கம்யூனிஸ்ட் மற்றும் தொழிற்சங்கங்களான இலங்கை வர்த்தக ஊழியர் சங்கம் லங்கா சேவக சங்கமய என்பன வற்றின் ஊர்வலங்களினதும் கூட்டங்களினதும் விபரங்கள் ஒலிபரப்பப் பட்டன.

ஆனால் இன்றைய பிரதான எதிர்க் கட்சியான தமிழர் விடுதலைக் கூட்டணியினதும், அதன் தொழிற்சங்க அணியான தமிழ் தொழிற் சங்க கூட்டணியினதும் யாழ்ப்பாண ஊர்வல, கூட்ட விபரங்கள் வானொலியில் ஒலி பரப்பப் படவில்லை,

ஆனால் மே தினத்தன்று ஜே. ஆர் வானொலியில் ஆற்றிய உரையொன்றில் "சகல எதிர் கட்சிகட்கும் சம அந்தஸ்து வழங்கப்படும்" என்று கூறியதை அதே வானொலி தனது செய்தியில் ஒலிபரப்பியது. இலங்கை தமிழ் மக்களின் ஒரே அணியான த.வி. கூட்டணி இலங்கையில் பிரதான எதிர் கட்சியாக இருப்பது அந்த "உத்தமருக்கு" தெரிய வில்லையா? அல்லது அவரின் சொல்லை மீறி நிருவாகம் நடக்கிறதா? அல்லது இப்படியான செயல்களைத் தான் தார்மீகம் என்றழைக்கிறார்களா? என்று கேட்கிறார்கள் தன்மானத் தமிழ் மக்கள்,

---

## செல்வா சிலைக்கு நிதி உதவி செய்தோர்

லண்டன் ஈழ விடுதலை இயக்கத்தினர் உலகத்தமிழர் தந்தை செல்வாவின் முழுவடிவ வெண்கலச்சிலை செய்வதற்கு லண்டனில் நிதிசேகரித்தபோது அதற்கு உதவிய லண்டன் தமிழன்பர்களின் விபரம் வருமாறு; அடைப்புக் குறிக்குள் போடப்பட்டுள்ள தொகை இங்கிலாந்து பவுண் ஆகும்.

ஏ.இ. ஜோசெப் 5-00, அ. வைரமூர்த்தி 10-00. ஏ. ரி, எஸ். ரட்னசிங்கம் குடும்பம் 10-00, ஆ. தங்கேஸ்வரன் 5-00, தி. தேவதாசு 10-00 வி. ராஜேஸ்வரன் 15-00, வ. இராமசந்திரன் (அன்பர்) 20-00, ச, ஞா.வியாசர் 10-00 க. சிவகுருநாதன் 10-00, சி, வேலாயுதம் 5-00, எஸ். சிவ ஞானசேகரம் 5-00, பாலா (அன்பர்) 10-00, திரு. குலவீரசிங்கம் 101-00, ச. ம. சதானந்தன் 10-00. எஸ். நகுல் 5-00,எம்,சிவா 10-00, எஸ். கே, காவன் 5-00, வீ. இராமசாமி 15-00. கோ.கு. ரெங்கராஜ் 5-00, ஆ. சுந்தரன் 5-00, சி.சுந்தரம் 20-00 ம. கி. மூர்த்தி 10-00, மகேந்திரன் 50-00, வணங்காமுடி 50-00, திரு. விசுவலிங்கம் 50-00, திரு. தருமலிங்கம் 50.00, திரு. சந்திரபோஸ் 101-00,திரு. பிள்ளை 50-00.ஜீ ஜீ.ஞானரத்தினம் 5-00, ஐ. பொன்னுத்துரை 5-00, கே. மனோகராஜ் 5-00, கே, செல்வேந்திரன் 10-00.

---

## மூதூரிலிருந்து ஓடிவந்த தமிழ் அகதிகள் கதிரைவெளியிலிருந்து துரத்தப்பட்டனர்!

### நாடாண்ட தமிழன் நடுத்தெருவில் அலைவதா?

ஆவணி அமளி அடங்கி ஆண்டு ஒன்று ஆவதற்கு முன் தமிழன் தன் நாட்டிலேயே அடி உதை பட்டு அநியாயமாக அகதிகளாகும் துன்பக் கதை சேருவில, மூதூர் தொகுதிகளில் மீண்டும் ஆரம்பமாகியுள்ளது. தனிப்பட்ட ஒரு சிங்களவனுக்கும் தமிழனுக்குமிடையே மூண்டதாகச் சொல்லப்படும் மோதல், தமிழர்களை, அவர்கள் பண்டு, பரம்பரையாக வாழ்ந்துவந்த பூமியிலிருந்து அழித்துவிடும் இனத்துவேஷப் போராக மாறிய பயங்கரத்தை என்னென்று சொல்வது?

கங்கு வேலி
நிலாப் பொள
6ம் குடியிருப்பு
தெய் வெத்த
அலி உளுவ
மேன் காமம்

ஆகிய இடங்களில் வாழ்ந்த தமிழர்களில் உயிர் இழக்க வர்கள் தவிர, மற்றவர்கள் எல்லோரும் தங்களது பெருந் தொகையான ஆடு, மாடு, கோழி நெற்களஞ்சியங்கள்—இப்படிப் பல்வேறு பட்ட சொத்துக்களை இழந்து அகதிகளாக சம்பூர், கூனைத்தீவு, கதிரவெளி, வாகரை முதலான தமிழ்க் கிராமங்களில் தஞ்சம் புகுந்துள்ளனர். வாகரை, கதிர வெளியில் தஞ்சம் புகுந்தோரை அப்பகுதிப் பாடசாலைகளில் தங்க வைத்து அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்வதில் கோறளை வடக்கு உதவி அரசாங்க அதிபர் திரு. ஏ. தங்கராசா அவர்கள் ஈடுபட்டிருந்தார்.

ஆனால்—

அகதிகள் மேற்படிக் கிராமங்களுக்கு ஓடி வந்து பத்து நாள் கூட ஆகவில்லை. அரசாங்க அதிபரிடமிருந்து அவசர உத்தர வொன்று [illegible] ரவு— 'வாகரை—கதிர வெளியில் தங்கியுள்ள அகதிகளை உடனடியாக அவ்விடங்களிலிருந்து அப்புறப் படுத்த வேண்டும்! அவர்களுக்கு எந்த வித உதவியையும் அரசாங்கம் செய்யாது' கடுகளவும் மனிதாபிமானமற்ற இவ்வுத்தரவைக் கேள்வியுற்ற அகதிகள் கண்ணீர் விட்டனர். கையேந்தித் தங்க இடம் யாசித்தனர்! (கவனித்தீர்களா தமிழனின் நிலையை) ஆனால், உதவி அரசாங்க அதிபரால் என்ன செய்ய முடியும்? உத்தரவு தான், மேலிடத்திலிருந்து வந்து விட்டதே, அரசாங்க, அதிபர் மூலமாக! ஆம்! இந்த அநியாய உத்தரவை அனுப்பிய அந்த மேலிடத்து மனிதர் பற்றியேதான் எங்கும் பரவலாகப் பேசிக் கொள்ளப் படுகிறது! அகதிகள் அவ்விடத்திலிருந்து அகற்றப் பட்டனரென்று மக்கள் மத்தியில் பேசிக் கொள்ளப் பட்டது. குறிப்பிட்ட தினத்தில் அமைச்சர் வாகரைக்கு விஜயம் செய்ததினால், மேற்படிப் பேச்சு— உண்மையென்றே மக்கள் நம்புகின்றனர். கூட்டத்தில் சமூகமளித்திருந்த அகதிகளில் சிலர், தங்களின் பரிதாபகரமான நிலையை அமைச்சரிடம்எடுத்துச் சொல்லிய போது, 'கலகம் மூண்ட பகுதிகளில் தற்போது அமைதி நிலவுவதாகவும், எனவே அகதிகள்எனச் சொல்லப் படுவோர் அவரவர் ஊர்களுக்குத் திரும்பிச் செல்லும்படி பணித்ததாகவும் அறியப்படுகிறது.

ஈழத் தமிழர்களின் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கும் நாவலர் அமிர்தலிங்கம் அவர்கள் ஒரு காலத்தில் நாடாண்ட நமது தமிழ்ச் சகோதரர்கள் நடுத்தெருவுக்குத் தள்ளப்பட்டுள்ளனர் என்பதை அறிந்து வேண்டிய உதவியை விரைந்து செய்வார் என்று நம்புகிறோம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

 தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது.



## உங்கள் கேள்விகளுக்கு தலைவர் அமிர்தலிங்கம் பதிலளிக்கிருர்!

சுதந்திரன் வாசகர்களின் கேள்விக்கு சுதந்திரன் மூலம் வாராவாரம் பதிலளிக்க தமிழர் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் அவர்கள் இசைவு தந்துள்ளார் என்பதை மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறோம். உங்கள் கேள்விகள், இயக்கம், அரசியல், சமூகம், பொருளாதாரம் எவை சம்பந்தமானதாகவும் இருக்கலாம்.

கேள்விகள் அனுப்ப வேண்டிய முகவரி:

அ. அமிர்தலிங்கம். பா. உ;
மே/பா.
ஆசிரியர் சுதந்திரன்,
238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

# தமது எதிர்காலத்தை தமிழ் தொழிலாளர்களே தீர்மானிக்கவேண்டும்

### இ தொ. கழக தலைவர் சூசைதாசன் பேச்சு!

'தொழிலாளர்களின் நிலை உயர வேண்டும் என்று தொழிலாளர்கள் போராட்டம் செய்து வெற்றிபெற்ற திருநாளை இன்று நாம் கொண்டாடுகின்றோம். ஆனால் நமது மலையக தொழிலாளர்களின் வாழ்க்கை நிலையை பார்க்கும்போது கண்ணீர் வருகிறது. இந்த நிலையை மாற்றி அமைக்க நமது சமுதாயம் முன்வர வேண்டும்."

இவ்வாறு டிக்கோயாவில் நடைபெற்ற மேதினக் கூட்டத்தில் உரையாற்றிய மன்னார் நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தொழிலாளர் கழகத்தின் தலைவருமான திரு. பி. எஸ். சூசைதாசன் தெரிவித்தார்.

பல கலைநிகழ்ச்சிகளுடன் ஆரம்பமான இக்கூட்டத்தில் திரு. சூசைதாசன் தொடர்ந்து பேசும் போது வீட்டு வசதியும் நாட்டு வசதியு மட்டுமல்லாது



திருப்திகரமான கல்விவசதி, சுகாதார வசதி, பொருளாதாரவசதி ஆகிய எவையுமே இல்லாத நிலையில், திரிசங்க சொர்க்க நிலையில் வாழுகின்ற ஒரு இனம் இருக்கிறது என்றால் அது மலையக தோட்டத் தொழிலாளர்களின் இனம் மட்டுமேயாகும். இந்த நிலை தொடர்ந்து இருக்கத்தான் வேண்டுமா? அல்லது உலகில் வாழும் நாகரீகம் பெற்ற மக்களைப்போல நமது மக்களும் வாழ வேண்டுமா?என்பதை தீர்மானிக்கவேண்டிய கால கட்டத்தில் இருக்கிறோம் என்பதை தொழிலாளர் வர்க்கம் மறந்திடாமலே நல்லமுடிவுக்கு வர வேண்டும் என்று கூறினர்.

—1-ம் பக்கத்தொடர்

தனமாக நசுக்க முயன்றது தான் தம்மை ஆயுதப்புரட்சியில் இறங்குகிற நிலைமைக்குத் தள்ளியதாக திருப்பித் திருப்பி ஜாதிகவிமுக்தி பெரமுனையும் ஏனைய இயக்கங்களும் 1971 பயங்கரவாதத்துக்கு காரணம் கூறியிருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

தமிழ் இளைஞர்களுக்கு எதிராக பொலிசாரால் கையாகப்பட்ட கடும்நடவடிக்கைகள், பொலீஸ் நிலையங்களிலும், நாலாவது மாடியிலும் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த தமிழ் இளைஞர்களுக்கு நடைபெற்றதாக சொல்லப்படும் மோசமான சித்திரவதைகள், காரணமின்றி கைது செய்யப்பட்ட சம்பவங்கள், அடி உதை, சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் தமிழ் அரசியல் எடுபிடிகளின் தூண்டுதலின் பேரில் தமிழ் இளைஞர்களை கைதுசெய்து காவலில்வைத்தமை, போன்றவையும் தமிழ் இளைஞர்களிடையே பயங்கரவாத இயக்கம் தோன்றுவதற்கு பிரதான காரணிகளாகும்.

அரசாங்கத்துக்கு நிலவரங்கள் பற்றிமுழுமையானதும். உண்மையானதுமான அரசியல் புலனாய்வுகள் தரப்படுவதில்லையென்றே தோன்றுகிறது. அரசுக்கு சரியான தகவல்கள் தரப்பட்டிருந்தால், 1971 ஏப்ரல் ஐந்து பயங்கரவாதத்தை மட்டுமன்றி, கடந்த மூன்று ஆண்டுகளுக்குள் தோன்றிய தமிழ்ப்புலிகளின் பயங்கரவாத இயக்கத்தையும் தவிர்த்திருக்கலாம்"

இவ்வாறு Tribune (டிறிபியூன்) பத்திரிகை எழுதியுள்ளது.

# மட்டுநகர் சிறைச்சாலைக்கு தங்கத்துரை இடமாற்றம்

## 17ம் திகதிக்கு விசாரணை ஒத்திவைப்பு

அண்மையில் நடந்த மூதூர் கலவரம் சம்பந்தமாக கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த முன்னாள் மூதூர் பா. உ. திரு. அ. தங்கத்துரை சம்பந்தமான வழக்கு விசாரணை கடந்த 5ம்திகதி திருமலைமாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி திரு. எச். எஸ். அகலவத்தை முன்னிலையில் விசாரணைக்கெடுத்துக்கொள்ளப்பட்டது.

மூதூரில் பெரும் பரபரப்பையேற்படுத்தியவரெனக் கூறப்படும் கந்தப்போடி என்ற தமிழ் இளைஞரும் மற்றும் சிலரும் வழக்கின் எதிரிகளாகக் குற்றம்சாட்டப்பட்டு நீதிமன்றத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தார்கள். வழக்கு விசாரணையைப் பார்வையிடுவதற்காக கூட்டணிப் பிரமுகர்கள் உட்பட பெருந்திரளான மக்கள் நீதிமன்ற வளவின் உள்ளும், புறமும் அணிதிரண்டிருந்தார்கள். இவர்களைக் கட்டுப்படுத்துவது பொலிசாருக்கும் பெரும் சிரமமான காரியமாகஇருந்தது.

கிளிவெட்டியில் நடந்து முடிந்த திரு. திருமதி. அப்புகாமி ஆகியோரின் இரட்டைக் கொலை சம்பந்தமாக சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்ட திரு. தங்கத்துரையுடன் முத்துக்குமாரபிள்ளை, தங்கராசா என்ற இருவரும் குற்றவாளிகளாகக் கருதப்பட்டு நீதிமன்றத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்தார்கள். அரசு தரப்பின் சிரேஸ்ட சட்டத்தரணி ரோகன் ஜயதிலக வழக்கை நடத்தினர். எதிரிசார்பில் திரு. பா. நேமிநாதன், எம். கே. செல்வரசா, விக்கினேஸ்வரன் போன்ற வேறுபல சட்டத்தரணிகளின் அனுசரணையுடன் சிரேஸ்ட சட்டத்தரணியான திரு. சிவா இராசரத்தினம் ஆஜரானர்.

'இன்னும் போதிய சாட்சியங்கள் தயாரிக்கவில்லை' என்ற பொலிசாரின் கூற்றையேற்ற நீதிபதி எதிர்வரும் 17ம்திகதிவரை வழக்குவிசாரணையை ஒத்திவைத்தார். அனுராதபுர மறியல்சாலையின் ஒருசில சிங்கள அதிகாரிகள் தமிழர்கள் மீது காட்டும் கொடூரமான போக்கை எடுத்துரைத்த எதிரிதரப்பு சட்டத்தரணியின் வேண்டுகோளை யேற்ற நீதிபதி திரு. தங்கத்துரையை இம்மாதம் 17ம் திகதிவரை மட்டுநகர் மறியல்சாலையில் வைக்கும்படி உத்தரவிட்டார்;

இதுசம்பந்தமான வேறொரு வழக்கில் குற்றம் சாட்டப்பட்டிருந்த முன்னாள் கிளிவெட்டி கிராம சபைத்தலைவர் திரு. விநாயகமூர்த்தி, தங்கராசா, கணேசரத்தினம் போன்றவர்களையும் எதிர்வரும் 17ம்திகதி நீதிமன்றத்தில் ஆஜராகும்படி உத்தரவிடப்பட்டது.

'திரண்டிருந்த பெருந்திரளான மக்களைக் கலைந்து போகச் சொல்லும்படியும்; இல்லையானல் நாம் தடியடிப் பிரயோகம் நடத்துவோமெனவும்' ஒரு தமிழ் இளைஞரிடம் அங்கு கடமையிலீடுபட்டிருந்தசிங்களப்பொலிஸ் அதிகாரியொருவர் கூறியதாக அறியப்படுகிறது!

## மெழுகுவர்த்தி

அமரர் டாக்டர் நாகநாதனின் சரித்திரம்
சிலம்புச்செல்வர் ம.பொ:சி,
மதிப்புரையுடன்
நூலாசிரியர்: கரிகாலன்
விலை: ரூபா 5-00
கிடைக்குமிடம்;-
சுதந்திரன் அலுவலகம்
238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

இப்போது
விற்பனையாகிறது!

## பாராளுமன்றத்தில் பெரியவர்

(தொடர்—1)
விலை ரூபா ஒன்று
கிடைக்குமிடம்:
சுதந்திரன் வெளியீட்டகம்,
194ஏ; பண்டாரநாயக வீதி,
கொழும்பு-12.

## 14.5.78 ஞாயிறு சுதந்திரனில்

தேசிய அரசுப்பேரவையில்: தமிழீழப் புலிகளின் கடிதமும் தலைவர் அமிர்தலிங்கம் அளித்த சூடான பதிலும்;

முழுமையாக இடம்பெறும்

## நல்லூர் தொகுதி கூட்டணி தொகுதிக் கிளை

தலைவர்: திரு. மு. சிவசிதம்பரம், உபதலைவர்: வண்ணை ஆனந்தன், செயலாளர்: பெ. கனகசபாபதி, உபசெயலாளர். வ, தம்பித்துரை, பொருளாளர்: கி. நாகராசா, நிர்வாக சபை உறுப்பினர்கள்: சு. சண்முகராசா. வெ. அப்பையா, சி. பொ. வேலாயுதபிள்ளை, க. வர்ணகுலசிங்கம், இ. குணநாயகம், வ. சி. சோதிலிங்கம். செ. இராசா, ஆ. துரைராசசிங்கம், க. முத்துச்சாமி, திரு. இராமலிங்கம்.

## தேசிய அரசு பேரவையில் 'சுதந்திரன்'

தேசிய அரசுப்பேரவையில் 'சுதந்திரன்' பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. "பிரிவினை ஒன்றைத் தவிர தமிழ் மக்களுக்கு வேறு வழியில்லை'' என்று தந்தை செல்வா நினைவுச் சொற்பொழிவுகளை நிகழ்த்துவதற்காக இங்கு வந்திருந்த டாக்டர் திவாகரிடம் தமிழர் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கமும், ஏனைய கூட்டணித் தலைவர்களும் எடுத்துக் கூறியிருந்ததாக சுதந்திரன் ஒரு செய்தியை அண்மையில் வெளியிட்டிருந்ததல்லவா? இச்செய்தியை பேரவையில் சிங்களத்தில் மொழி பெயர்த்து வாசித்து 'பிரச்சினை' கிளப்பியவர் ஐ. தே. கட்சியைச் சேர்ந்த மகரகம உறுப்பினர் திரு. பிரேமரத்தின குணசேகரா ஆவார்.

திரு. குணசேகரா இதையொட்டிப் பேசுகையில் "ஒரு சிங்கள மகன் இங்கு உள்ளவரை இந்நாட்டைப் பிரிக்க முடியாது; பிரிக்கவிட மாட்டோம்'' என்ருர்.

(பேரவைநடவடிக்கை புத்தகம் கிடைத்ததும் முழு விபரம் சுதந்திரனில் வெளியிடப்படும்.)

இப்பத்திரிகை கொழும்பு-12, 194 ஏ, பண்டாரநாயக்கா வீதியிலிருக்கும் சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் நிறுவனத்தாரால் 1978ம் ஆண்டு மே மாதம் 10-ம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது! அச்சுப் பதிப்பு! வஸ்தியன் அச்சகம், பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org